### பொங்கல் விடுமுறைக்கு

# மெட்ரோ ரெயில் டிக்கெட்டில் 50 சதவீத தள்ளுபடி

சென்னை, ஜன.13–
சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், மெட்ரோ பயணிகளின் வசதிக்காக அனைத்து ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் அரசு பொது விடுமுறை நாட்களில் மெட்ரோ ரெயில் பயணச் சீட்டுகளில், 50 சதவீத கட்டண தள்ளுபடி அளித்து வருகிறது. அந்த வகையில் பொங்கல் விடுமுறைகளான 15, 16 மற்றும் 17–ந்தேதி அரசு பொது விடுமுறை என்பதால் அன்றும் 50 சதவீத கட்டண தள்ளுபடி வழங்கப்படுகிறது.

மேலும் காணும் பொங்கல் தினமான 17–ந்தேதி அரசினர் தோட்டம் மற்றும் ஏ.ஜி.டி.எம்.எஸ். மெட்ரோ ரெயில் நிலையங்களில் இருந்து மெரினா கடற்கரைக்கு பொதுமக்கள் சென்று வர வசதியாக காலை முதல் இரவு வரை மெட்ரோ சிருந்து இணைப்பு சேவைகள் இயக்கப்படவுள்ளன.

மேற்கண்ட தகவலை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.